செய்தி வெளியீடு எண் : 605 நாள்: 14.04.2022

# செய்தி வெளியீடு

## நீட் தேர்வு மசோதாவை ஒன்றிய அரசுக்கு விரைந்து அனுப்பி வைத்திடக் கோரி மாண்புமிகு ஆளுநர் திரு.ஆர்.என். ரவி அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தின் சுருக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி அவர்களுக்கு இன்று (14-4-2022) எழுதியுள்ள கடிதத்தில், நீட் தேர்வு தொடர்பான மசோதாவிற்கு விரைவில் மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதலை பெறும் வகையில் இந்திய அரசுக்கு அனுப்பிவைக்க கேட்டுக்கொண்டுள்ளார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இப்பொருள் குறித்து இருமுறை தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிவைக்கப்பட்ட போதும், நேரில் ஆளுநரைச் சந்தித்து இது குறித்து தான் பேசிய பின்னரும், நீட் தேர்வு மசோதாவானது மாண்புமிகு ஆளுநர் அவர்களால், மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற இந்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்படாதது மிகுந்த வேதனையளிப்பதாக தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். மேலும், தான் நேரில் சந்தித்து இப்பொருள் குறித்து வலியுறுத்தியபோது மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இம்மசோதா தன்னால் இந்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்படும் என்று உறுதியளித்ததையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இருமுறை இந்த மசோதா நிறைவேற்றப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டும், மாண்புமிகு ஆளுநர் அவர்களிடம் இக்கோரிக்கையினை நேரில் வலியுறுத்திய பின்னரும்,

இந்நிகழ்வில் முன்னேற்றம் காணப்படாததால், இன்றைய தினம் (14 - 4 - 2022) தனது அமைச்சரவையின் இரண்டு மூத்த அமைச்சர்களை மாண்புமிகு ஆளுநரைச் சந்தித்து இக்கோரிக்கையினை மீண்டும் வலியுறுத்த கேட்டுக்கொண்ட போது, அவர்களிடம் நீட் தேர்வுக்கான மசோதாவானது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் இந்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்படும் என்ற உறுதியான பதில் பெறப்படாத நிலையில், தமிழக மக்களின் ஒட்டுமொத்த உணர்வையும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மாண்பினையும் கருத்தில் கொண்டு இன்று ஆளுநர் மாளிகையில் வழங்கப்படும் தேநீர் விருந்தில் கலந்துகொள்வது முறையாக இருக்காது என்று தனது கடிதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மாநில மக்களின் நலனை முன்னிறுத்தி, அரசியலமைப்புச் சட்டத்தின்படி இருவரும் தங்கள் கடமைகளை ஆற்றும் பொழுது மாநில மக்களும், மாநிலமும் வளம் பெறும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் தெரிவித்து, மாண்புமிகு ஆளுநருக்கும் மாநில அரசுக்குமான உறவு தொடர்ந்து இணக்கமாகவும், சுமூகமாகவும் இருக்குமென்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

**P.R.No:605** **Date: 14.04.2022**

**Text of D.O.Letter of Hon’ble Chief Minister of Tamil Nadu Thiru.M.K.Stalin to Hon’ble Governor of Tamil Nadu Thiru.R.N.Ravi, with regard to forward the NEET Bill to Government of India.**

In the last few months since you assumed charge as the Governor of Tamil Nadu, we have been enjoying a cordial and productive relationship. The State Government is pleased to follow all due protocols; extending the official courtesies and observing all norms and conventions with reference to the esteemed office of the Governor. During this period, you would also have observed that my Government values the will of the people of Tamil Nadu the most and all our efforts have been focused on converting such collective will into instruments of action and implementation.

It is in this context that the Tamil Nadu Legislative Assembly had unanimously passed the Bill for exempting Tamil Nadu from NEET in Medical Graduate admissions and enabling these admissions are done only on the basis of the marks scored by students in +2 public exams. In my earlier discussions with you, I had briefed you on the various steps taken by our Government, especially constitution of a High-Level Committee headed by a retired Judge of Hon’ble High Court of Madras in this regard. The NEET issue had been a matter of deep concern for the people of the State and

gradually the social consensus on NEET evolved into a political and legislative consensus in the State. The draft NEET Exemption Bill passed by the Tamil Nadu Legislative Assembly is an outcome of such legislative consensus stemming from the will of our people.

When the NEET Bill was sent back from your good office to the Legislative Assembly, requiring for certain clarifications and reconsideration, we did not view it an adversarial stand. We had complied with the constitutional process, debated it in detail, clarified the points raised by you and sent it back for reserving the same for the Presidential assent. During my subsequent meetings with you also, I had stressed upon the significance of this particular Bill and requested you to forward it to the Union Government. You may recall that during our last meeting, you have assured us that this process will be expedited, but I am pained to note that the bill is yet to be transmitted to the Government of India.

As you may be aware, the admission process for the medical courses for the next academic year is to commence shortly and there is tremendous anxiety and uncertainty among the aspiring students and their parents in the State. Given this situation, I am sure that you would appreciate our sense of disappointment and dismay at this juncture over the impasse. I am pained to note that despite our repeated efforts to impress upon your goodselves on the urgency and sensitivity of the matter, this issue is evoking no positive response from your side.

With this critical situation in mind, today (14-4-2022) I had deputed two of my senior Ministers to brief you in person and obtain clarity on the way forward within a timeframe. Unfortunately, I am informed that no positive assurance has been given to them during the discussion. Given these circumstances, we consider that it would be inappropriate for us to attend this celebratory event hosted at Raj Bhavan, where the collective will of our society as well as our Legislative Assembly have not been given its due regard.

Even now, I sincerely hope that you will see the fairness in our request and forward the NEET Bill to Government of India without any further delay, thereby fulfilling the constitutional mandate.

I am confident that when both of us discharge our constitutional duties constructively, the State shall stand to benefit and continue to prosper. I am sure that our relationship would continue to be warm and cordial in the best interest of the people of Tamil Nadu.

======

**Issued By: - DIPR, Secretariat, Chennai - 9.**

For Latest Government News, Follow Us On :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in